بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 12/04/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## உஹுது போரில் சஹாபா மற்றும் சஹாபியாக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய உயிரை அர்ப்பணித்தல் மற்றும் உஹுதின் ஷஹீதுகளின் உயர்தரம் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَاِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَلَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ரமலானுக்கு முன்பு குத்பாக்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே பங்கு பெற்ற போர்கள் பற்றி கூறப்பட்டு வந்தது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்று அம்சங்களும் எடுத்துக் கூறப்பட்டிருந்தன. இன்றும் நான் இது தொடர்பாக சிலவற்றை எடுத்துக் கூறுவேன்.

அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் சஃது பின் முஆஸ் (ரலி) அவர்களின் தாயார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், 'இவர்கள் என் தாயார் ஆவார்கள்' என்று பணிவுடன் கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்பொழுது குதிரை மீது அமர்ந்திருந்தார்கள். அன்னார் தமது குதிரையை நிறுத்தி விட்டு, 'அவர்களை வரவேற்பீராக' என்று கூறினார்கள்.

அந்தப் பெண் அருகில் வந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களின் மகன் ஹஸ்ரத் அம்ர் பின் முஆஸ் (ரலி) அவர்கள் ஷஹீதானதற்காக இரங்கல் தெரிவித்தார்கள். அப்பொழுது அவர்கள், 'நான் தங்களை நலமுடன் இருக்கக் கண்ட பிறகு எனது துன்பம், துயரம் எல்லாம் முடிவுக்கு வந்து விட்டன' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'உமக்கு நற்செய்தி! மேலும், ஷஹீதான மற்றவர்கள் அனைவரின் வீட்டாருக்கும் நற்செய்தி கூறி விடுவீராக. கொல்லப்பட்ட இவர்கள் அனைவரும் சுவர்க்கத்தில் ஒருவர் மற்றவருடன் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தத்தமது வீட்டாருக்காக உண்மையாளனாகிய இறைவனிடம் பரிந்துரை செய்துள்ளார்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உம்மு சஃது (ரலி) அவர்கள், 'நாங்கள் அனைவரும் திருப்தி அடைந்துள்ளோம். இந்த நற்செய்திக்குப் பிறகு, யார்தான் அவர்களை நினைத்து அழ முடியும்' என்று பணிவுடன் கூறினார்கள். பிறகு, அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், 'ஷஹீதுகள் அனைவரின் பின்விட்டுச் சென்றவர்களுக்காக துஆ செய்யுங்கள்' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

எனவே, ஹுஸூர் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! அவர்களுடைய உள்ளங்களிலிருந்து துயரத்தையும் வேதனையையும் அகற்றி விடுவாயாக! அவர்களுடைய இன்னல்களை விலக்கி விடுவாயாக! ஷஹீதானவர்களின் பிரதிநிதிகளை அவர்களுடைய சிறந்த பிரதிநிதிகளாக ஆக்கிவிடுவாயாக.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மதீனத்து மக்கள் தம்மை மாய்த்துக் கொண்டதைப் பற்றி எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** இப்பொழுது பாருங்கள்! எந்தப் பெண்ணின் வயோதிக பருவத்தில் முதுமையின் ஆதரவுத்தடி உடைந்து விட்டிருந்ததோ அவர்கள் எந்த அளவு வீரமிக்க முறையில் இவ்வாறு கூறுகிறார்கள்:

என் மகனின் மரணத்தின் துயரம் என்னை உண்பது என்ன! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் எனும் போது நான் அந்தத் துயரத்தை வறுத்து சாப்பிட்டு விடுவேன். **இன்னொரு சந்தர்ப்பத்தில், இதே சம்பவத்தை எடுத்துக் கூறி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்:** அன்ஸாரிகளே! என் உயிர் உங்கள் மீது அர்ப்பணம்! நீங்கள் எவ்வளவு நற்கூலி எடுத்துச் சென்று விட்டீர்கள்!

இவ்வாறே **சஹாபியாக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய தியாகங்களின் பின்னணியில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் அஹ்மதி பெண்களைப் பார்த்து இவ்வாறு கூறுகிறார்கள்:** இந்தப் பெண்கள்தான் இஸ்லாத்தைப் பரப்புவதிலும் தப்லீகிலும் ஆண்களுக்குத் தோளுக்குத் தோள் நிகராகச் சென்றார்கள். இந்தப் பெண்கள் மீதுதான் இஸ்லாமிய உலகம் கர்வம் கொள்கிறது.

நீங்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதாகவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நிழலாக இருக்கிறார்கள் என்றும் வாதம் புரிகிறீர்கள். ஒருவகையில், மற்ற சொற்களில் நீங்கள் சஹாபியாக்களின் நிழல்களாக இருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் சரியாகச் சொல்லுங்கள்! சஹாபியாக்களிடம் இருந்த மார்க்கத்திற்கான அதே உத்வேகம் உங்களிடம் பொங்கி எழுகிறதா?

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* சில சம்பவங்கள் பற்றி முன்னர் கூறப்பட்டு விட்டதுதான். உதாரணமாக, இந்த

சம்பவம் பற்றியும் முன்பு கூறப்பட்டு விட்டது. ஆனால், இவை எத்தகைய சம்பவங்கள் என்றால், இவற்றை மீண்டும் மீண்டும், வெவ்வேறு பாணிகளிலும் கேட்டு ஒரு விநோதமான ஈமானின் தன்மையும் உத்வேகமும் உருவாகின்றன.

**முதல் நூற்றாண்டுகளின் இந்த உயிரை அர்ப்பணித்த சஹாபியாக்களைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:** கிறிஸ்தவ உலகத்தினர் மகதலேனா மரியாளும் அவருடைய தோழியர்களான பெண்களும் காலை நேரத்தில் எதிரிகளிடமிருந்து ஒளிந்து ஈஸா மஸீஹின் கப்ரை சென்றடைந்தார்கள் என்ற அவர்களுடைய வீரத்தில் மகிழ்ச்சியடைகிறார்கள்.

நான் அவர்களிடம் கூறுகிறேன், வாருங்கள்! வந்து சற்று என் அன்பருடைய கலப்பற்ற மக்கள், தம்மை மாய்த்துக் கொண்ட மக்கள் எந்த நிலைமைகளில் அன்னாருடன் நின்றார்கள் என்றும், எந்த நிலைமைகளில் அவர்கள் ஓரிறைமையின் கொடியை உயர்த்தினார்கள் என்றும் பாருங்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹுது போருக்குப் பிறகு மதீனா சென்றடைந்ததும், நயவஞ்சகர்களும் யூதர்களும் மகிழ்ச்சியைக் கொண்டாடவும், முஸ்லிம்களைப் பழித்துரைக்கவும் தொடங்கினார்கள்.

மேலும், 'ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அரசராக ஆசைப்படுகிறார்கள், (நவூதுபில்லாஹ் - அவ்வாறு கூறுவதை விட்டும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்). இன்று வரை அன்னார் பெற்ற அளவுக்கு இழப்பை எந்த நபியும் பெற்றதில்லை; தாமும் காயமடைந்தார்கள்; அன்னாருடைய சஹாபாவும் காயமடைந்து விட்டார்கள்' என்று கூறத் துவங்கி விட்டார்கள்.

மேலும், 'கொல்லப்பட்ட உங்களுடைய மக்கள் எங்களுடன் இருந்திருந்தார்கள் என்றால், ஒருபோதும் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்' என்றும் கூறி வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இப்படி பேசிக்கொண்டிருந்த நயவஞ்சகர்களைக் கொல்வதற்கு அனுமதி கோரினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை என்றும், நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன் என்றும் சாட்சி பகர்வதில்லையா? இந்த மக்கள் கலிமா கூறுவதில்லையா?

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'ஏன் இல்லை, கலிமா கூறத்தான் செய்கிறார்கள்; ஆனால், வாளுக்கு அஞ்சி கூறுகிறார்கள். இல்லையெனில், நயவஞ்சகமான விஷயங்களை ஏன் பேசுகிறார்கள்? இப்பொழுது அவர்களது விவகாரம் வெளிப்பட்டு விட்டது. அவர்களுடைய உள்ளத்து விஷயம் வெளிப்பட்டு விட்டது. அல்லாஹ் அவர்களுடைய

வன்மங்களை வெளிப்படுத்தி விட்டான். இப்பொழுது அவர்களைப் பழிவாங்க வேண்டும்.

இதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰہِ என்று கூறினாரோ அவரைக் கொல்வதை விட்டும் நான் தடுக்கப்பட்டுள்ளேன்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இந்த விஷயம் அந்தப் பெயர்தாங்கி ஆலிம்களின் வாயை அடைப்பதற்குப் போதுமானதாகும். அஹ்மதிகள் உள்ளத்தால் இந்தக் கலிமாவைக் கூறுகிறோம். நயவஞ்சகம் மருந்துக்குக்கூட நம்மிடம் இல்லை. அப்படியிருந்தும் அஹ்மதிகளைப் பற்றி இவர்கள் காஃபிர்கள்; இவர்களைக் கொல்வது ஆகுமானது என்று இந்த ஆலிம்கள் கூறுகிறார்கள். இந்தப் பெயர்தாங்கி ஆலிம்கள்தான் இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தி வைத்துள்ளார்கள்.

உஹுதின் ஷஹீதுகளின் ஜனாஸா பற்றி புகாரீயின் அறிவிப்பு வருகிறது, அதில் இருந்து அந்த ஷஹீதுகளின் உயர்த்தகுதி மற்றும் அந்தஸ்த்து பற்றி தெரியவருகிறது. ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் 8 ஆண்டுகளுக்குப் பிறகு உஹுதின் ஷஹீதுகளுக்கு ஜனாஸா தொழுகை தொழவைத்தார்கள்.

பிறகு, மிம்பர் மீது ஏறினார்கள். மேலும், இவ்வாறு கூறினார்கள்: நான் உங்களுக்கு முன்னால் முன்செல்பவனாக இருப்பேன். நான் உங்கள் மீது சாட்சியாளனாக இருப்பேன். உங்களை சந்திக்கும் இடம் சுவர்க்கத்தின் நீர்த்தேக்கம் ஆகும். மேலும், நான் அதை, நான் நிற்கும் இந்த இடத்திலிருந்து பார்க்கிறேன். உங்களைக் குறித்து நீங்கள் இணைவைப்பீர்கள் என்ற அச்சம் எனக்கு இல்லை. ஆனால், உங்களைக் குறித்து, எனக்கு உலகத்தைப் (பெறுவதைப்) பற்றிய அச்சம் இருக்கிறது. நீங்கள் அதற்காக ஒருவர் மற்றவருடன் போட்டி போடுவீர்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘எனக்கு உஹுதின் ஷஹீதுகள் நினைவுக்கு வரும் போது, இறைவன் மீது ஆணையாக! நானும் என்னுடைய தோழர்களுடன் சேர்ந்து மலையடிவாரத்திலேயே இருந்திருக்கக் கூடாதா என்ற ஆசை எனக்கு ஏற்படுகிறது. அதாவது, அவர்களுடன் சேர்ந்து ஷஹீதாகியிருப்பேனே’ என்று கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹுதின் ஷஹீதுகளின் கப்ருகளைப் பார்வையிட்டார்கள். மேலும், இவ்வாறு துஆ செய்தார்கள்:

அல்லாஹ்வே! நிச்சயமாக இந்த மக்கள் ஷஹீதுகள் ஆவார்கள் என்றும், எவர் இவர்களுடைய கப்ருகளுக்கு வந்து கியாமத் வரை இவர்கள் மீது சலாம் அனுப்புகிறாரோ அவர்கள் அதற்கு பதில் அளிப்பார்கள் என்றும் உன் அடியானும் நபியுமாகிய நான் சாட்சி பகர்கிறேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹுது போரின் ஷஹீதுகளுக்காக இவ்வாறு கூறினார்கள்: இந்த மக்களுக்கு நான் சாட்சியாவேன்.

அறிவிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒவ்வோர் ஆண்டின் துவக்கத்திலும் உஹுதின் ஷஹீதுகளின் கப்ருகளைப் பார்க்கச் செல்வார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் இவ்வாறே அந்த ஷஹீதுகளின் கப்ருகளுக்குச் சென்று வந்தார்கள்.

ஹஸ்ரத் பிஷர் (ரலி) அவர்களின் தந்தை உஹுது போரில் ஷஹீது ஆகி விட்டார்கள். அவர்கள் தம் தந்தைக்காக அழுது கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் பக்கமாகக் கடந்து சென்றார்கள். அப்பொழுது அன்னார் கூறினார்கள்: அமைதியாகிவிடு. நான் உனக்குத் தந்தையாகவும் ஆயிஷா உனக்குத் தாயாகவும் ஆகி விடுவது உனக்கு மகிழ்ச்சி இல்லையா?' என்று கேட்டார்கள்.

பிஷர் அவர்கள், 'ஏன் இல்லை! அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதை விட அதிகம் மகிழ்ச்சியான விஷயம் வேறு என்ன இருக்க முடியும்?' என்று பணிவுடன் கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களுடைய தலையில் கையால் தடவினார்கள். ஹஸ்ரத் பிஷர் (ரலி) அவர்கள் முதியவர் ஆன பிறகு, முழு தலை முடியும் வெள்ளையாகி விட்டது. ஆனால், எந்த இடத்தில் ஹுஸூர் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய கையால் தடவினார்களோ அந்த இடத்தின் முடிகள் அப்படியே கருப்பாகவே இருந்தன. ஹஸ்ரத் பிஷர் (ரலி) அவர்களின் திக்குவாய் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓதி ஊதிய பிறகு திக்கு நீங்கிக் கொண்டே சென்றது.

*இந்தக் குறிப்பு இனியும் தொடரும் என்று கூறிய பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* மத்தியக் கிழக்கு நாடுகள் மற்றும் உலகத்தின் நிலைமைகளுக்காகவும் தொடர்ந்து துஆக்கள் செய்து கொண்டே இருங்கள். நிலைமைகள் மோசத்திலும் மோசமாகிக் கொண்டே செல்கின்றன. ஈரான் மீது தாக்குதல் நடப்பதற்கான, போர் மேலும்

விரிவடைவற்கான ஆபத்து உள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ் கருணை புரிவானாக!

நேற்றே, ஏமனில் இறைவழியில் சிறைசென்றவர்கள் சிலர் விடுதலையாகி இருக்கிறார்கள் என்ற செய்தி வந்துள்ளது. இன்னும் சொல்வதாயின், பெரும்பாலார் விடுவிக்கப்பட்டு விட்டனர். மீதமிருக்கும் சிலருடைய விடுதலைக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அதிகாரிகளின் உள்ளத்தை அவர்களைக் குறித்து தெளிவாக்குவானாக! குறிப்பாக, லஜ்னா தலைவியான ஒரு பெண்மணி சிறைவாசத்தில் இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களது விரைவான விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்வானாக.

*குத்பாவின் இரண்டாவது பகுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்புகளை எடுத்துரைத்தார்கள்.*

*முதலாவது, ஹஸ்ரத் நவாப் அப்துல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் மற்றும் ஹஸ்ரத் நவாப் அமத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா அவர்களின் மகனான மதிப்பிற்குரிய முஸ்தஃபா அஹ்மத் கான் சாஹிப் ஆவார்கள். இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எல்லாரையும் விட சிறிய மகள்வழிப் பேரராவார்கள்.*

*இரண்டாவது, அமெரிக்காவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் மீர் தாவூத் அஹ்மத் சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள்.*

*இவர்கள் இருவரின் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பதற்கான அறிவிப்பும் செய்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகவும் உயர்வான அந்தஸ்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**